தினமணி
இன்றைய வேளாண் செய்திகள்

## ஒகேனக்கல் அருவிக்கு நீர்வரத்து 31 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு



தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் அருவிக்கு செவ்வாய்க்கிழமை மாலை நீர்வரத்து 31 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக மாநில நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அங்குள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர், ஹாரங்கி உள்ளிட்ட அணைகள் நிரம்பி வழிகின்றன.

இதனால், கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் காவிரியாற்றில் திறந்து விடப்படுகிறது. இந்த நீர் கடந்த 18-ஆம் தேதி தமிழக எல்லையில் உள்ள பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல் அருவிக்கு வந்தடைந்தது.

செவ்வாய்க்கிழமை காலை ஒகேனக்கல் அருவிக்கு நீர்வரத்து 27 ஆயிரம் கன அடியாக இருந்தது. மாலையில் நீர்வரத்து 31 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

இதனால், ஒகேனக்கல் அருவியில் உள்ள பிரதான அருவி, சினி அருவி, ஐந்தருவி, மணல் திட்டு ஆகிய பகுதிகளில் நீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இந்நிலையில், கர்நாடக அணைகளிலிருந்து வரும் உபரி நீரின் அளவு மேலும் அதிகரித்துள்ளதாகவும், இதனால் ஒகேனக்கல் அருவிக்கு புதன்கிழமை காலை சுமார் 40 ஆயிரம் கன அடி வரை நீர்வரத்து இருக்கும் எனவும் பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குளிக்கத்தடை நீட்டிப்பு: ஒகேனக்கல்

அருவியில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் 5-ஆவது நாளாக சுற்றுலாப் பயணிகள் குளிக்கவும், பரிசல் ஓட்டவும் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், காவிரிக் கரையோரமுள்ள காமராஜ் நகர், ஊட்டமலை உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## குடிநீருக்கு பாலாறு அணை திறப்பு

பாலாறு பொருந்தலாறு அணையில் கிராமங்களின் குடிநீர் தேவைக்காக 300 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

பழனி அருகே உள்ளது பாலாறு பொருந்தலாறு அணைக்கட்டு. மாவட்டத்தின் பெரிய அணைக்கட்டு இது. இந்த அணை பழனி நகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. தற்போது பருவமழை பொய்த்ததால் அணையில் மிக குறைந்த அளவு தண்ணீர் இருப்பு உள்ளது. சுமார் 65 அடி உயரமுள்ள இந்த அணையில் 27அடி அளவிற்கே தண்ணீர் உள்ளது.

இந்நிலையில் இந்த அணையில் இருந்து மானூர், நரிக்கல்பட்டி, தொப்பம்பட்டி வரை உள்ள கிராம மக்களின் குடிநீர் தேவைக்காக 300 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் கிராமங்களில் ஆற்றோரம் உள்ள கிணற்றுகளில் தண்ணீர் ஊற்றெடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரிலேயே அணை திறப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் திங்கள்கிழமை மாலை திறக்கப்பட்ட ஷட்டர் புதன்கிழமை மாலை மூடப்பட்டு விடும் என்றும் பொதுப்பணித்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பழனி நகர்மன்றத் தலைவர் வேலுமணி கூறுகையில், பழனி பாலாறு அணையில் இருந்து பழனி நகர மக்களின் தேவைக்கும், பக்தர்களின் தேவைக்கும் குடிநீர் பெறப்பட்டு வருகிறது.

அணையில் தற்போது மிக குறைந்த அளவே தண்ணீர் இருப்பு உள்ளது. அணையில் உள்ள சேற்றின் அளவையும் சேர்த்தே அதிகாரிகள் உயரத்தை கணக்கிட்டு வருகின்றனர். தற்போதைய தண்ணீர் திறப்பால் பழனிக்கு செயற்கையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

**"நத்தம் பகுதியில் நாற்றங்கால் அமைத்து துவரை நடவுப் பணி தொடங்கலாம்'**

**நத்தம் பகுதி விவசாயிகள் துவரையை நாற்றங்கால் அமைத்து நடவு செய்து அதிக மகசூல் பெறுவதற்கு, மானிய சொட்டு நீர்ப் பாசன வசதியை பெற்று பயனடையுமாறு, வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.**

நத்தம் பகுதியில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் இறவை சாகுபடியில் அதிக மகசூல் பெற, கோ.ஆர்.சி.7. என்ற ரக துவரையை குழித்தட்டுகளில் விதைத்து, 25 முதல் 35 நாள்கள் வரை பாதுகாப்பாக வளர்க்க வேண்டும். பின்னர், தங்கள் நிலத்தை நல்லமுறையில் உழுது 8-க்கு 3 அடி என்ற அளவில் பாத்தி அமைத்து, அதில் துவரை நாற்றை நடவு செய்யவேண்டும். இம்முறையில் ஏக்கர் ஒன்றுக்கு 3 ஆயிரம் துவரை நாற்றுகள் தேவைப்படும். இதன்மூலம், விவசாயிகள் துவரையை சாகுபடி செய்வதால், அதிக மகசூல் பெறலாம். மேலும், தங்கள் விவசாயத்துக்கு சிக்கன நீர்ப்பாசன முறையை மேற்கொள்ளும் வகையில், மானியத்துடன் கூடிய சொட்டு நீர்ப்பாசன வசதி பெறலாம் . இது குறித்து, நத்தம் வட்டார விவசாயிகள் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்துக்கு நேரில் வந்து விளக்கம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துளார்.

**விவசாயிகள் நிலங்களில் சோலார் மின் மோட்டார் திட்டம்: சிவகங்கை ஆட்சியர் பார்வையிட்டார்**

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளின் நிலங்களில் ஆழ்துளைக் கிணற்றில் சூரிய ஒளி மின்சக்தி மூலம் நீர் இறைக்க 5 குதிரை திறன் சக்தி கொண்ட சோலார் பி.வி பம்ப் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேளாண்மைப் பொறியியல்துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் இத்திட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 60 விவசாயிகளின் நிலங்களில் சோலார் பி.வி பம்ப் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 2 கோடியே 56 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கை தாலுகாக பாகனேரி வருவாய் கிராமம் கூமாச்சிபட்டி கிராமத்தில் சிவப்பிர காசம் என்பவரது நிலத்தில் உள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நீர் இறைப்பதை ஆட்சியர் வே. ராஜாராமன் பார்வையிட்டார். ஆட்சியரிடம் விவசாயி கூறுகையில், இத்திட்டம் ஒரு வரப்பிரசாதம். வறட்சி காலத்தில் சூரிய ஒளி மின்சக்தி மூலம் இறைக் கப்படும் நிலத்தடி நீரைக்கொண்டு கரும்பு, மரவள்ளிக்கிழங்கு, கால்நடை தீவனங்கள் போன்றவை சாகுபடி செய்துள்ளதாக தெரிவித்தார்.

இதுபோன்ற சோலார் பி.வி பம்ப் அமைக்க விவசாயி தனது பங்களிப்பாக ரூ. 1 லட்சத்து 4,750 வங்கி வரைவோலையாக நிறுவனத்தின் பெயரில் செலுத்தவேண்டும். அரசு ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.3,35,200 மானியமாக வழங்குகிறது. இதன் மொத்த விலை ரூ.4,39,950 ஆகும். விவரங்களுக்கு செயற்பொறியாளர் (வே.பொ) மாவட்ட ஆட்சியர் வளாகம், தொலைபேசி: 04575 240213 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு ஆட்சியர் விவசாயிகளை கேட்டுக்கொண்டார்.இந்த ஆய்வின் போது செயற்பொறியாளர்(வே.பொ) இரா. ராஜகோபால் உடனிருந்தார்.

## பவானி ஆற்றின் கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

காரமடையை அடுத்த பில்லூர் அணையிலிருந்து பாதுகாப்பு கருதி தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து, பவானி ஆற்றின் கரையோரப் பகுதி மக்களுக்கு மீண்டும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி மாவட்டத்திலுள்ள அப்பர் பவானி, அவலாஞ்சி, குந்தா, கேரளத்தில் உள்ள மன்னார்காடு, அட்டப்பாடி மற்றும் பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது.

இதனால், கடந்த 2 மாதங்களாக 50 அடியாக இருந்த பில்லூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயரத் துவங்கியது. அணையின் முழுக் கொள்ளளவான 100 அடியில் கடந்த 17-ஆம் தேதி நீர்மட்டம் 93 அடியாக உயர்ந்தது. இதையடுத்து, பாதுகாப்பு கருதி அணையிலிருந்து 6,000 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, பவானி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது. இதனால், பவானி ஆற்றின் கரையோரப் பகுதி மக்களுக்கு வருவாய்த்துறை சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. தொடர்ந்து, கேரளம் மற்றும் நீலகிரி மாவட்டப் பகுதிகளில் மழை அளவு குறைந்ததால் அணைக்கு நீர் வரத்தும் குறைந்தது.

இந்நிலையில், கடந்த 2 நாள்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில், பருவமழையின் தாக்கம் அதிகரித்ததை தொடர்ந்து, கேரள மாநிலப் பகுதியிலும், நீலகிரி மாவட்டம் உள்பட பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதனால் பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயரத் தொடங்கியது. செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி நிலவரப்படி பில்லூர் அணைக்கு விநாடிக்கு 12,000 கன அடி தண்ணீர் வந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 6,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

தொடர்ந்து, அணையின் நீர்மட்டம் 96 அடியாக உயர்ந்ததையடுத்து, அணையின் பாதுகாப்பு கருதி, பகல் 3 மணியளவில் அணையின் 4 மதகுகளும் திறந்து விடப்பட்டன. இதையடுத்து, பவானி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது.

மீண்டும் வெள்ள அபாய எச்சரிக்கை: பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து, மேட்டுப்பாளையம் வருவாய்த் துறை சார்பில் வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி, பவானி ஆற்றின் கரையோரப் பகுதி மக்களுக்கு 2-ஆவது முறையாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

பாதுகாப்பு கருதி பில்லூர் அணையின் 4 மதகுகளும் திறக்கப்பட்டதையடுத்து, பவானி ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டோடுகிறது.

எனவே, பவானி ஆற்றின் கரையோரமுள்ள நெல்லித்துறை, தேக்கம்பட்டி, ஓடந்துறை, மேட்டுப்பாளையம், ஆலாங்கொம்பு, சிறுமுகை பகுதியில், தாழ்வான இடங்களில் வசிக்கும் மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆற்றின் நீர்மட்டம் குறித்து வருவாய்த் துறை ஊழியர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் என்றார்.

பவானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடுவதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. இதனால் மேட்டுப்பாளையம், சிறுமுகை, பவானிசாகர் ஆற்று நீர் கால்வாய் பாசன விவசாயிகளும், சத்தி உள்பட ஈரோடு மாவட்டப் பகுதி மக்களும், விவசாயிகளும் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வேளாண் மாணவிகளுக்கு பயிற்சி

வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு, தென்னை மரங்களில் நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி முகாம் உடுமலை அருகே திங்கள்கிழமை நடைபெற்றது.

தேனி வேளாண் தொழில் நுட்பக் கல்லூரி இளநிலை பட்டப்படிப்பு மாணவிகளுக்காக மடத்துக்குளம் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தின் சார்பில், பல்வேறு கிராமங்களில் களப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு மாதங்கள் நடைபெறும் இந்த பயிற்சி முகாமில், விவசாயம், அது தொடர்பான உப தொழில்கள், களப் பிரச்னைகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மடத்துக்குளத்தை அடுத்துள்ள சாமராயபட்டி கிராமத்தில் விவசாயி ஒருவரது தென்னந்தோப்பில் பயிற்சி நடைபெற்றது.

அதில், தென்னை மர வேரில் ஏற்படும் நோய்கள் குறித்தும் அதை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டன (படம்). மேலும், மடத்துக்குளத்தை அடுத்துள்ள சாமிநாதபுரம் அரசு உயர் நிலைப்பள்ளி

வளாகத்தில் காய்கறித் தோட்டம் அமைப்பது குறித்த செயல்முறை விளக்க நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் சண்முகராஜ், தலைமை ஆசிரியர் மு.கலா உள்ளிட்டோர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## நெல் கொள்முதலின்போது ஊக்கத்தொகை வழங்க மத்திய அரசு தடை: விவசாயிகள் சங்கம் கண்டனம்

நெல் கொள்முதல் செய்யும்போது, மத்திய அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச ஆதார விலையோடு, மாநில அரசு ஊக்கத்தொகை வழங்கக் கூடாது என மத்திய அரசு தடைவிதித்துள்ளது கண்டிக்கத்தக்கது என கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத் தலைவர் செ.நல்லசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: நெல், கோதுமை உள்ளிட்டவற்றின் குறைந்தபட்ச ஆதரவுக் கொள்முதல் விலை மத்திய அரசால் ஆண்டுதோறும் அறிவிக்கப்படும். மாநில அரசு ஊக்கத் தொகை நிர்ணயம் செய்து, இதோடு சேர்த்துக் கொடுப்பது நடைமுறையில் உள்ளது.

சாகுபடிச் செலவு மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடுவதைப் போல, இந்த ஊக்கத்தொகையும் வேறுபடுகிறது. மொத்தத்தில், இவ்வாறு கொடுக்கப்படும் தொகை கட்டுபடியானதாக இல்லை. இந்த ஊக்கத்தொகையை மாநில அரசுகள் இனி கொடுக்கக் கூடாது.

மத்திய அரசு நிர்ணயம் செய்யும் விலைக்குத்தான் கொள்முதல் செய்ய வேண்டும். இவ்வாறான புதிய அறிவிப்பை மோடி அரசு வெளியிட்டுள்ளது. பல மாநிலங்களில், மத்திய அரசின் உணவுக் கழகம் கொள்முதல் செய்து வருகிறது. தமிழகத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் நடைபெறுகிறது.

இந்த மாநிலங்கள், மாநிலத் தேவையை விடக் கூடுதலாகக் கொள்முதல் செய்துவிடக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கூடுதல் கொள்முதல், பணவீக்கத்தை ஏற்படுத்துவதுடன் வேறு பயிர்களுக்கு விவசாயிகள் மாறுவதற்கு இந்த ஊக்கத் தொகை தடையாக உள்ளது என்ற குற்றச்சாட்டையும் சுமத்தியுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் எம்.பி., எம்.எல்.ஏ., அரசு ஊழியர், ஆசிரியர் ஆகியோர் ஊதியம் சராசரியாக 200 மடங்கு உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், வேளாண் விளைபொருள்களின் விலை 50 மடங்கு மட்டுமே அதிகரித்துள்ளது. விவசாயத்தை விட்டு வெளியேறுவதற்கு இதுவே முதன்மைக் காரணம். விவசாயிகள் தற்கொலைக்கும் இதுவே அடித்தளம்.

ஊதியக்குழு பரிந்துரையை மத்திய அரசு அப்படியே ஏற்றுக் கொண்டு, முன்தேதியிட்டு கொடுப்பது நடைமுறையில் உள்ளது. அதே நேரத்தில், வேளாண் விளைபொருள் விலை நிர்ணயக் குழு பரிந்துரையை விடக் குறைத்துக் கொள்முதல் விலை நிர்ணயம் செய்வது அரசின் நீண்ட காலநடைமுறை.

இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14-க்கு எதிரானது. இந்திய விவசாயிகளை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தும் போக்கு. மாநில அரசுகள் கொடுத்து வந்த ஊக்கத் தொகையை, இனிவரும் காலங்களில் வழங்கக் கூடாது எனக் கட்டளை இட்டிருப்பது தவறான நடைமுறை. இவ்வாறாக எடுத்திருக்கும் முடிவு நாட்டை உணவுப் பஞ்சத்தில் நிறுத்தும் எனத் தெரிவித்துள்ளார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 58.47 அடி**

மேட்டூர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 58.47 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 21,188 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணையில் தண்ணீர் திறப்பு இல்லை.

**பெரம்பலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் செட்டிக்குளம் வெங்காய குளிர்பதன கிடங்கில் வியாழக்கிழமை (ஜூலை 24) நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிகுளத்தில் புதியதாக திறக்கப்பட்டுள்ள வெங்காய குளிர்பதன கிடங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண்மை இடுபொருள்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவித்து பயன் பெறலாம்.

**வணிக வளாகத்தை பயன்படுத்திக் கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு**

செட்டிகுளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சின்ன வெங்காயத்துக்கான வணிக வளாகத்தை பயன்படுத்தி, ஏல முறையில் விற்பனை செய்து அதிக லாபம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஆலத்தூர் வட்டம், செட்டிகுளம் கிராமத்தில் ரூ. 114.90 லட்சத்தில்

அமைக்கப்பட்ட சின்ன வெங்காயத்துக்கான வணிக வளாகம் மற்றும் காய்கறிகளுக்கான குளிர்பதன சேகரிப்பு கிடங்கை, கடந்த ஜூன் 27-ம் தேதி காணொலி காட்சி மூலம் தமிழக முதல்வர் திறந்து வைத்தார். இங்கு, தரம் பிரிப்பு, விற்பனை கூடம், சேமிப்பு கிடங்கு, 50 மெட்ரிக் டன் குளிர்பதன சேமிப்பு கிடங்கு, 12 கடைகள், மூட்டைகளை எடை போட மின்னணு தராசு, மூட்டைகளை தைக்க தையல் கருவி உள்ளிட்ட வசதிகள் உள்ளன. முதன்முறையாக கடந்த 17-ம் தேதி நடைபெற்ற சின்ன வெங்காய ஏல விற்பனையில் 1,620 கிலோ சின்ன வெங்காயம் விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகள் தங்களது வெங்காயத்தை மின்னணு தராசு மூலம் எடையிட்டு விற்பனை செய்ய எவ்வித கட்டணமும் கிடையாது. வாரம்தோறும் வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் மறைமுக ஏலத்தில் விவசாயிகள் தங்களிடமுள்ள சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து விற்பனை செய்துகொள்ளலாம். ஏலம் எடுக்க விரும்பும் வியாபாரிகள் தங்களது பெயரை பதிவு செய்தபின் கலந்துகொள்ளலாம். எனவே, மாவட்ட விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை செட்டிகுளம் வணிக வளாகத்துக்கு கொண்டு சென்று மறைமுக ஏலத்தில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம்.

## வேளாண் அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம்

திருநெல்வேலியில் உரம், பூச்சி மருத்துகளின் தரக்கட்டுபாடு குறித்த வேளாண் அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண்துறையில் பணி செய்யும் வேளாண் அலுவலர்களுக்கான உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் தரக்கட்டுபாடு குறித்த புத்தாக்கப் பயிற்சி முகாம் பாளையங்கோட்டையில் இணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமை வேளாண்துறை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் தொடங்கி வைத்தார். வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) இரா. கஜேந்திரபாண்டியன், விருதுநகர் வேளாண் உதவி இயக்குநர் தி. விவேகானந்தன், வேளாண் விற்பனைக்குழுச் செயலர் தா. விஜயகுமார், விதைச்சான்று அலுவலர் சிவகுமார், உரக்கட்டுபாடு ஆய்வக வேளாண் அலுவலர் ஜெ. மோகன் ஆகியோர் உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் தரக்கட்டுப்பாடு குறித்துப் பேசினர்.

உரம், பூச்சி மருந்துகள் மாதிரி எடுத்தல், பூச்சிக் கொல்லி மருந்துகளின் ஆய்வக முறைகள், தரமற்ற உரம், பூச்சி மருந்தினை கண்டறிதல், உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் தரக்கட்டுப்பாடு, கடைகளில் உரங்களின் இருப்பு போன்ற விவரங்கள் மற்றும் தரமான உரங்கள் விற்பனை செய்வதை உறுதி செய்ய மாதிரி

எடுத்தல், கலப்பட உரங்களை கண்டறிதல் போன்றவை குறித்து வேளாண் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

முகாமில் அலைபேசி மூலம் உரங்கள் கண்காணிப்புத் திட்டம் குறித்து ஸ்பிக் உர நிறுவன மேலாளர் சந்திரசேகரன், கோரமண்டல் பெர்டிலைசர்ஸ் நிறுவன மேலாளர் ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் பேசினர். இணைய தளம் மூலம் பதிவு செய்வது குறித்து செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இணை இயக்குநர் அலுவலக வேளாண் அலுவலர் அ. கற்பகராஜ்குமார் நன்றி கூறினார்.

## காலத்தால் அழியாதது முல்லைப் பெரியாறு அணை




"நூறு ஆண்டுகளைக் கடந்த முல்லைப் பெரியாறு அணை காலத்தால் அழியாத அளவுக்கு வலுவாக உள்ளது' என்று மத்திய நீர்வள ஆணையத்தின் தலைமைப் பொறியாளர் எல். அறம்வளர்த்தநாதன் தெரிவித்தார்.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்துவதையும், அணையின் பாதுகாப்பை கண்காணிக்கவும் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழுத் தலைவராக அறம்வளர்த்தநாதன் உள்ளார். தில்லி தமிழ்ச் சங்கத்தில் "முல்லைப் பெரியாறும், முழு விவரங்களும்' என்ற தலைப்பில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்வில் அவர் பேசியது:

ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஆங்கிலேயர் அளித்த கொடைதான் முல்லைப் பெரியாறு அணை. குறைவான மழைப் பொழிவு

இருந்த பகுதிகள் பாசனம் பெறும் வகையில், மழைப் பொழிவு அதிகம் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் முல்லைப் பெரியாறு அணை கட்டப்பட்டது. 1880 ஆண்டுகளில் திட்டமிடப்பட்டு, கர்னல் பென்னி குயிக் தலைமையில், மிகவும் கடுமையாக மேற்கொண்ட முயற்சியால் முல்லைப் பெரியாறு அணை உருவானது. அது இந்தியாவுக்கு ஆங்கிலேயர்கள் அளித்த பரிசாகக் கருதுகிறேன்.

தற்போது நதி நீர் இணைப்புத் திட்டங்களை பலரும் பரவலாகப் பேசி வருகின்றனர். ஆனால், அக்காலத்திலேயே, மாநிலங்களிடையே ஓடும் ஆற்று நீரின் ஓட்டத்தைக் கணக்கிட்டு தொலைநோக்குப் பார்வையுடன் முல்லைப் பெரியாறு அணையை ஆங்கிலேயர்கள் கட்டினர்.

இந்த அணையைக் கட்டும் திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் முதல் முயற்சியிலேயே இத்திட்டம் தோல்வியடைந்தது. இதன் விளைவாக அணை உடைந்தது. ஆனால், அணையை மீண்டும் கட்டுவதற்காக பென்னி குயிக் அவரது தாயகம் சென்று தனது சொத்துகளை விற்றார். விடாமுயற்சியுடன் அவர் மேற்கொண்ட பணிகளால் முல்லைப் பெரியாறு அணை வெற்றிகரமாக கட்டி முடிக்கப்பட்டது. நூறு ஆண்டுகளைக் கடந்து காலத்தால் அழியாத 155 அடி உயரம் கொண்ட அணையாக முல்லைப் பெரியாறு விளங்குகிறது.

ஆங்கிலேய அரசுக்கும், நிஜாம் அரசுக்கும் ஒரு காலத்தில் எல்லைக் கோடாக துங்கபத்ரா நதி விளங்கியது. அப்போது அந்த நதியில் கட்டப்பட்ட துங்கபத்ரா அணை, கரிகால சோழன் கட்டிய கல்லணை போன்றவை காலத்தால் அழியாதûவாகும். அது போலவே, முல்லைப் பெரியாறு அணையின் கட்டுமான நுட்பங்களை தற்போதும் நாம் கண்டு வியக்கிறோம்' என்றார் அறம்வளர்த்தநாதன்.

முல்லை பெரியாறு அணை ஆய்வுப் பணியில் மத்திய நீர்வள ஆணையம் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளையும், தனது அனுபவங்களையும் தில்லிவாழ் தமிழர்களிடையே அவர் பகிர்ந்து கொண்டார்.

தமிழ் கற்பது அவசியம்: இதே போல, "எல்லாம் தமிழ்' என்ற தலைப்பில் உலகத் தமிழ் சங்கத்தின் தனி அலுவலர் (பொறுப்பு) க. பசும்பொன் பேசியது:

தமிழ் அல்லது திராவிட பண்பாடுதான் சிந்து சமவெளி நாகரிகம். இதற்கு ஆதாரமாக பலுசிஸ்தான் பகுதியில் பிராகுயி என்ற திராவிட மொழி பேசப்படுகிறது. தொல்காப்பியம் 2,300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. அதில் கூறப்பட்டுள்ள பொருள் அதிகாரம், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகள் தமிழின் இலக்கிய வளத்துக்குச் சான்றுகள். சமண சமயத்துக்கு சீவக சிந்தமாணி, நாக குமார காவியம்; சைவ சமயத்துக்கு பெரிய புராணம், கந்த புராணம், வைண சமயத்துக்கு ஆழ்வார்கள், இஸ்லாமத்துக்கு சீறாப்புராணம், யூசு நபி காவியம், கிறிஸ்தவத்துக்கு தேம்பாவணி, இயேசு

காவியம் என சமயங்கள் அனைத்துக்குமான இலக்கியங்கள் தமிழில் உள்ளதால், சமயத்துக்கான மொழி என அறியப்படுகிறது.

வணிகத்தின் மொழி ஆங்கிலம், தூதின் மொழி பிரெஞ்சு, கவிதை, காதலின் மொழி இத்தாலி, தத்துவத்தின் மொழி ஜெர்மனி என்றால் உலகிலேயே பக்தி, சமயத்தின் மொழி தமிழ் என தனிநாயகம் அடிகள் கூறுகிறார்.

ஆங்கிலேயர் ஆட்சியைத் தவிர்த்து, தொல்காப்பியம் காலம் தொடங்கி தமிழ் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. இதற்கு அந்தந்த கால கட்டத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் ஆதாரமாக உள்ளன. ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, நீதிமன்ற மொழியாக, வழிபாட்டு மொழியாக தமிழ் உள்ளது. இந் நிலையில், சுய சிந்தனை உருவாக தமிழ் மொழி கற்பது அவசியம் என்றார் பசும்பொன்.

முன்னதாக தில்லி தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் தனது வரவேற்புரையில், தமிழ் அமைப்புகளை ஒருங்கிணைக்கவும், உலக தமிழ்ச் சங்கத்துக்கு ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்ததற்கும், தமிழ் வளர்ச்சித் துறை மூலமாக தமிழ் அமைப்புகளுக்கு "தமிழ்த் தாய் விருது' வழங்கி வருவதற்கும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த தீவிர முயற்சி மேற்கொண்டதற்கும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்ச் சங்க நிர்வாகிகள், தமிழ் ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

---

**பொள்ளாச்சியில் ராட்சத காளான்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அருகே வினோதமாக வளர்ந்துள்ள காளானை, பொதுமக்கள் அதிசயமாக பார்த்து வருகின்றனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே, கப்பளாங்கரையைச் சேர்ந்த ராக்கிமுத்துவின் தோட்டத்தில் குடை வடிவில், இந்த காளான் வளர்ந்துள்ளது. அதன் உயரத்தை அளந்து பார்த்த போது, மூன்று அடி உயரமும், இரண்டரை அடி அகலமும், ஏழு கிலோ எடையும் இருந்தது. அருகே ஒரு அடி உயரத்தில், மேலும்

இரண்டு காளான்கள் வளர்ந்திருந்தன. இது குறித்து தகவல் அறிந்த கிராம மக்கள், காளானை ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

### விவசாயிகள் குறைதீர்க்க வரும் 25ல் கூட்டம்

திருச்சி: திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், வரும், 25ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடக்கும் கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்று, நீர்பாசனம், வேளாண்மை, இடுபொருட்கள், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுதவி, விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் மற்றும் வேளாண்மை தொடர்புடைய கடனுதவி குறித்து தெரிவிக்கலாம்.

### வேளாண் அமைப்பாளர் இரண்டு நாள் பயிற்சி

நாமக்கல்: கபிலர்மலை வட்டாரத்திற்கு உட்பட்ட உழவர் மன்ற விவசாய அமைப்பாளர்களுக்கு, பாகம்பாளையம் கிராமத்தில் இரண்டு நாள் பயிற்சி நடக்கிறது.

நாமக்கல் மாவட்ட உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், உழவர்மன்ற விவசாய அமைப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, ப.வேலூர் தாலுகா, கபிலர்மலை அடுத்த, பாகம்பாளையம் கிராமத்தில், இன்று (23ம் தேதி) மற்றும் நாளை (24ம் தேதி) ஆகிய, இரண்டு நாட்களுக்கு, காலை, 10 மணிக்கு நடக்கிறது. அதில், வேளாண், தோட்டக்கலை, கால்நடை, வேளாண் பொறியியல், மண் ஆய்வுத்துறை, பட்டு வளர்ச்சி, வனம், வேளாண் அறிவியல் நிலையம் ஆகிய துறைகள் சார்ந்த தொழில்நுட்ப வல்லுனர்கள் பங்கேற்று, உழவர்மன்ற அமைப்பாளர்களுக்கு பயிற்சி வழங்குகின்றனர். "விருப்பமுள்ள உழவர்மன்ற விவசாய அமைப்பாளர்கள், பயிற்சி முகாமில் பங்கேற்று, வேளாண் சார்ந்த தகவல்களை பெறலாம்' என, வேளாண் துணை இயக்குனர் பாலசுப்ரமணி தெரிவித்தார்.

### நிலக்கடலை காப்பீடுக்கு வசாயிகளுக்கு அழைப்பு

திருச்செங்கோடு: "திருச்செங்கோடு வட்டாரத்தில், மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், நிலக்கடலை பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம்' என, திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குனர் நமச்சிவாயம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:

திருச்செங்கோடு வட்டாரத்தில் உள்ள, 48.கைலாசம்பாளையம், தேவனாங்குறிச்சி, கருமாபுரம், கருவேப்பம்பட்டி, மோடமங்கலம், வட்டூர், ஏமப்பள்ளி, கே.புளியம்பட்டி, பட்லூர், சித்தாளந்தூர், தோக்கவாடி உள்ளிட்ட கிராமத்தில் நிலக்கடலை பயிரிட்ட விவசாயிகள், பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். அதற்காக, வருவாய் துறையிடமிருந்து, கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல் சான்று ஆகியவற்றை பெற்று, சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினை அணுகி, விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்கலாம். தலா, ஒரு ஏக்கருக்கு காப்பீடு தொகையாக, 808 ரூபாய் செலுத்த வேண்டும். இதற்காக, வரும், 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். எனவே, சம்பந்தப்பட்ட விவசாயிகள், காப்பீடுக்கான தொகையை செலுத்தி பயனடைய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**எள் சாகுபடி செய்ய அதிகாரிகள் அழைப்பு**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்மேற்கு மழை பெய்ய துவங்கிய நிலையில், மானாவாரியில், எள் சாகுபடி செய்து, விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்,' என்று, வேளாண்மை துறையினர், விவசாயிகளுக்கு அறிவுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து, மாவட்ட வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது தென்மேற்கு பருவமழை துவங்கி உள்ளது. இதனை பயன்படுத்தி, மானாவரி எள் சாகுபடி செய்வதற்கு, இதுவே தக்க தருணமாகும். விவசாயிகள், விஞ்ஞான தொழில் நுட்பங்களை முழுமையாக கடைபிடித்தால், அதிக மகசூல் பெறலாம். தற்போது, எள்ளில் ஏக்கருக்கு சராசரியாக, 125 முதல், 140 கிலோ மகசூல் தான் பெறப்படுகிறது. வேளாண் துறை பரிந்துரைக்கப்படும் முக்கிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றினால், ஏக்கருக்கு, 225 கிலோவில் இருந்து, 250 கிலோ வரை மகசூல் எளிதாக பெறலாம். ஒரு கிலோ எள், 40 ரூபாய் என்று கணக்கில் கொண்டால் கூட, ஏக்கருக்கு, 9,000 முதல் பத்தாயிரம் ரூபாய் வரை மூன்று மாதங்களில் பெறலாம்.

ஏக்கருக்கு, இரண்டு கிலோ வீதம், டி.எம்.வி.,3, வி.ஆர்.ஐ.,1, மற்றும் கோ1 ஆகிய ரகங்களில், ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து, தேவையான மணலுடன் கலந்து சீராக விதைக்க வேண்டும். விதை மூலம் பரவும் நோயினை தடுக்க, ஒரு கிலோ விதையுடன், இரண்டு கிராம் கார்பென்டசிம் அல்லது, நான்கு கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன், விதை நேர்த்தி செய்ய வேண்டும். பயிர்களுக்கு, இயற்கையாகவே தழைச்சத்து கிடைக்க ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன், ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு

பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா ஆகியவற்றை, ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர வைத்து பின், விதைக்க வேண்டும்.

ஏக்கருக்கு, அடி உரமாக, ஐந்து டன் தொழு உரம் இட்டு, அதனுடன் தழை, மணி சாம்பல் சத்து தரவல்ல, 20 கிலோ யூரியா, 31 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும், ஒன்பது கிலோ மூரியேட்ஆப் பொட்டாஸ் உரத்தினை அடி உரமாக இடவேண்டும். விதைத்த, 15 வது நாள் செடிக்கு, செடி, 15 செ.மீ., இடைவெளி இருக்கும்படியும், 30வது நாளில் செடிக்கு செடி, 30 செ.மீ., இடைவெளி உள்ளவாறு வைத்து, மற்ற செடிகளை அகற்றி விட வேண்டும். செடிகளை கலைத்து விடும்போது, வயலில் போதுமான ஈரம் இருப்பது நல்லது. எள் பயிரில் பயிர் கலைத்தல், ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறு, செய்யாவிட்டால் மகசூல் கணிசமாக குறையும்.

எனவே, மழையை பயன்படுத்தி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மானாவாரியில், எள் சாகுபடி செய்து, அனைத்து தொழில் நுட்பங்களை கடைபிடித்து, அதிக மகசூல் பெற்று பயன் பெறலாம், என்றனர்.

**தேயிலை ஏலத்தில் கடும் விலை வீழ்ச்சி**

குன்னூர் : தேயிலை வரத்து அதிகரிப்பு மற்றும் தேக்கம் காரணமாக, தேயிலை ஏலத்தில் கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

நீலகிரி மாவட்டம், குன்னூர் தேயிலை ஏல மையங்களில் 29வது ஏலம் நடந்தது. மொத்தம் 22.59 லட்சம் கிலோ தேயிலை துாள் ஏலத்திற்கு வந்தது. இதில், 15.74 லட்சம் கிலோ இலை ரகமும், 6.85 கிலோ டஸ்ட் ரகமும் இடம் பெற்றது. இந்த ஏலத்தில் மொத்தம் 82 சதவீதம் விற்பனையானது. சராசரி விலையாக 8 ரூபாய் வீழ்ச்சி ஏற்பட்டது. சாதாரண ரக இலைக்கு 44 முதல் 48 ரூபாய் வரையிலும், நல்ல ரகத்திற்கு 100 முதல் 160 ரூபாய் வரையிலும் சராசரி விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண துாளுக்கு, 45 முதல் 49 ரூபாய் வரையிலும், நல்ல ரகம் 120 முதல் 180 ரூபாய் வரையிலும் சராசரி விலை கிடைத்தது. உயர்ந்தபட்சமாக ஹோம்டேல் தேயிலைக்கு, டஸ்ட் ரகம் 192 ரூபாய், ஆர்த்தோடக்ஸ் தேயிலைக்கு 221 ரூபாய் வரையும் விலை கிடைத்தது.

இந்த வாரம் நடக்கும் 30வது ஏலத்தில் 24.10 லட்சம் கிலோ தேயிலை துாள் ஏலம் விடப்படுகிறது. இதில், 16.36 லட்சம் கிலோ இலை ரகமும், 7.74 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். 28வது ஏலத்தை வெளிநாட்டு வர்த்தகர்கள் புறக்கணித்ததால், ஏராளமான தேயிலை துாள் தேக்கமடைந்தது.

இந்நிலையில், கோவையில் நடந்த பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதால், நடப்பு ஏலத்தில் ஏற்றுமதி வர்த்தகர்களும் பங்கேற்றனர். எனினும், ஏற்கனவே விற்பனையாகாமல் தேங்கியிருந்த தேயிலை துாள் காரணமாகவும், தற்போது வரத்து அதிகரித்துள்ளதாலும், கடந்த முறை நடந்த ஏலத்தை விட, இந்த முறை கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

## மண் வளத்தை பாதுகாக்கும் 'பக் வீட்' செடி; விதை தட்டுப்பாடு நீக்க கோரிக்கை

ஊட்டி : 'மலைப் பிரதேசங்களில், மண் வளத்தை பாதுகாக்கும், 'பக் வீட்' தாவர விதைகளுக்குரிய தட்டுப்பாட்டை போக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

விவசாய நிலங்களில், அதிகரித்துவிட்ட ரசாயன உரங்களின் பயன்பாடால், மண் வளம் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால், விளைப் பொருட்களின் விளைச்சல், எதிர்பார்த்த அளவு இருப்பதில்லை; செடிகளை, பலவகை நோய்கள் தாக்குகின்றன.

**பலன் கொடுக்கும் 'பக் வீட்'** : மண் வளத்தை பாதுகாக்க, 'பக் வீட்' என்ற தாவரத்தை பயன்படுத்த, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகமும், தோட்டக்கலைத்துறையும் பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே கேர்ன்ஹில், எமரால்டு ரெட் ஹில் உட்பட சில இடங்களில், விவசாயிகள், 'பக் வீட்' செடிகளை வளர்க்க துவங்கியுள்ளனர்.

தோட்டக் கலை துறை அதிகாரிகள் கூறுகையில், 'பக் வீட் என்பது, தழைச் சத்து நிறைந்த தாவர இனம். பூக்களுடன் கூடிய இச்செடிகளை, விவசாய நிலங்களில் போட்டு, மண்ணில் புதையும் படி செய்ய வேண்டும். அதன் மூலம், மண் வளம் அதிகரிக்கும்; ஆரம்ப காலங்களில், 'பக் வீட்' செடிகளை வளர்த்து வந்த விவசாயிகள் பின், ஆர்வமின்மை காரணமாக கைவிட்டனர். நீலகிரி உட்பட மலைப் பிரசேதங்களில் மண் வளத்தை பாதுகாக்க, இத்தகைய செடிகளை நடவு செய்வது நல்லது' என்றனர்.

**விதைக்கு தட்டுப்பாடு** : ஊட்டி விவசாயி ராமச்சந்திரன் கூறுகையில், “மண்ணில், சல்பர், நைட்ரஜன் உட்பட நுண்ணுயிர்களின் அளவை அதிகரித்து, மண் வளத்தை பாதுகாக்க, 'பக் வீட்' தாவரத்தை மண்ணில் புதைத்து விட வேண்டும், என

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழக பேராசிரியர்கள் அறிவுறுத்தினர். அதன்படி, 'பக் வீட்' செடிகளை பயிரிட்டுள்ளேன்; பூக்களுடன் கூடிய செடிகளை, மண்ணில் புதைத்த 40 நாட்களில், அவை மண்ணில் கலந்து, மண் வளத்தை அதிகரிக்கிறது. விளைச்சல் அதிகரித்துள்ளது. 'பக் வீட்' செடிகளை பயிரிட, குறைந்தளவு விதைகளே, தமிழ்நாடு வேளாண் பல்கலை கழக ஆய்வு மையம் மூலம் வழங்கப்படுகிறது. அவற்றை வாங்கி, செடிகளை வளர்த்து, அவற்றில் இருந்து வரும் பூக்களில் இருந்து விதைகளை சேகரிக்க வேண்டியுள்ளது. விதைகள் தட்டுப்பாடின்றி கிடைக்க செய்தால், அதிகளவில் வளர்த்து, மண் வளத்தை பாதுகாக்க வசதியாக இருக்கும்," என்றார்.

## விவசாயிகளுக்கு பால் மாடு கடன்; மதுரை ஆவின் நிர்வாகம் தாராளம்

தேனி : விவசாயிகளுக்கு பால்மாடு வாங்க கடன் உதவி செய்யும் வங்கிகளில், ஆவின் நிர்வாகம் டெபாசிட் செய்து வருகிறது.

மதுரை ஆவினுக்கு மதுரை, தேனி மாவட்டங்களில் உள்ள 875க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் இருந்து பால் சப்ளை செய்யப்படுகிறது.
இந்த சங்கங்களில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது பால் கறக்கும் மாடுகள், பால் கறக்க தயாராக உள்ள மாடுகள் உட்பட ஒரு லட்சம் பால் மாடுகள் வரை வளர்க்கப்படுகின்றன. ஆவினுக்கு தினமும் ஒரு லட்சத்து 95 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. தவிர சென்னைக்கு அனுப்ப தினமும் 25 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. ஆனால் தேவையை விட குறைவாகவே பால் கிடைத்து வருகிறது. தற்போது கடும் வறட்சி நிலவுவதால் பலர் விவசாயத்தை கை விட்டு, பால் மாடுகள் வளர்த்து பிழைப்பு நடத்தி வருகின்றனர்.
இந்த வாய்ப்பினை பயன்படுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், ஆவின் பால் சப்ளையை அதிகரிக்கவும் ஆவின் நிர்வாகம் ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதற்காக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் பால் மாட்டுக்கடன் பெற விரும்பினால், அவர்களுக்கு இந்தியன் வங்கி அல்லது கனரா வங்கி மூலம் கடன் வழங்க ஏற்பாடுகளை செய்து வருகிறது. இதற்காக இந்த வங்கிகளில் ஆவின் முதலீடு செய்து வருகிறது. தவிர தாட்கோ மூலம் மானியத்திட்டங்களில்

விவசாயிகளுக்கு பால் மாடுகள் வழங்கி ஆவின் வருமானத்தை உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக பால் மாடுகள் வாங்க தயாராக உள்ள விவசாயிகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

## வெற்றிலை கொடிக்கால் அகத்தி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல்

தேனி : பெரியகுளம் பகுதியில் வெற்றிலை கொடிக்கால்களில் அகத்தி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது.

பெரியகுளம், ஜெயமங்கலம், மேல்மங்கலம், தேவதானப்பட்டி, குள்ளப்புரம் உட்பட பல கிராமங்களில் வெற்றிலை சாகுபடி அதிகம் நடக்கிறது. வெற்றிலை கொடிக்கால்களில் அகத்தி செடிகளை வளர்த்து, அதன் மேல் விவசாயிகள் வெற்றிலை கொடிகளை பரவ விட்டுள்ளனர். தற்போது நிலவும் வறண்ட பருவநிலை காரணமாக அகத்தி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது. செடிகளில் ஊர்ந்து செல்லும் எறும்புகள் மூலம் இந்த மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் பரவி வருகிறது. இதனை தடுக்கும் வழிமுறைகள் குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: லிண்டேன் 0.3 சதவீதம் உரத்தை அகத்தி செடிகளின் அடிப்பகுதியில் தூவி எறும்புகளை கட்டுப்படுத்த வேண்டும். குளோர்பைரிபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லியுடன் ஒட்டும் மீன் எண்ணெய் ரெஸின் சோப்பை ஒரு லிட்டருக்கு 25 கிராம் வீதம் கலந்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

## பண்ணைக்குட்டை அமைக்க அழைப்பு

விருதுநகர் : விருதுநகர்மாவட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழ், இலவசமாக பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2,700 பண்ணைக்குட்டைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 601 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மழைகுறைவான காலங்களில் விவசாய பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், பொதுவாக மானாவரி நிலங்களிலும், அனைத்து வகையான வேளாண் நிலங்களிலும்

பண்ணைக்குட்டைகள் அமைத்து பயிர்களை வறட்சியில் இருந்து காப்பதுடன், கிணறுகளில் நீர்மட்டத்தை பெருக்கி பயனடையலாம். அனைத்து நீர்வடிப்பகுதிகளிலும் பண்ணைக்குட்டைகள் அமைப்பதன் மூலம், நிலவளமும், ஈரப்பதமும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதுடன், பயிர் தொழிலை வளமானதாக்கலாம். அதில் சேமிக்கப்படும் நீரின் அளவு மற்றும் கால அளவினைப்பொறுத்து மீன்களை வளர்க்கலாம்.

குறைந்த பட்சம் 15 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம் மற்றும் 1.5 மீட்டர் ஆழம் வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின்கீழும், கூடுதல் ஆழம் வேளாண் பொறியியல்துறை மூலமும் அமைத்துத்தரப்படும். இதற்கு, வட்டார வேளாண் உதவி இயக்குனர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) ஆகியோரிடம் விண்ணப்பிக்கலாம். மழைக்காலம் துவங்கும் முன், இதனை அமைப்பதற்கான வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும், என, கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

---

## ஆனைமலை பகுதியில் கரும்பு வெட்டும் பணி தீவிரம்

ஆனைமலை பகுதியில் கரும்பு வெட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கரும்பு வெட்டும் பணி

ஆனைமலை வட்டாரத்தில் விவசாயம் முக்கியத் தொழிலாக திகழ்ந்து வருகிறது. தென்னை, நெல், கரும்பு, வாழை, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப் பட்டுள்ளன. ஆனைமலை பழைய ஆயக்கட்டு மற்றும் சுற்று வட்டாரப்

பகுதிகளில் சுமார் 1000 ஏக்கர் பரப்ப ளவில் கரும்பு சாகுபடி செய் யப்பட்டுள்ளது. தற்போது கரும்பு அறுவடை பருவம் தொடங்கி உள்ளது.

ஆனைமலை பகுதியில் கரும்பு வெட்டும் பணிக்கு போதிய கூலி ஆட்கள் கிடைக் காததால் விவசாயிகள், வெளி மாநிலத் தொழிலாளர் களை வர வழைத்துள்ளனர். கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டத்தில் இருந்து சுமார் 300 குடும்பத்தினர் கரும்பு வெட்டும் பணியில் ஈடுபட்டுள் ளனர். கணவன், மனைவி என மொத்த குடும்பத்தினரும் கரும்பு வெட்டுதல் மற்றும் அதை கட்டாகக் கட்டி லாரிகளில் ஏற்றுதல் ஆகிய பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.

தினமும் ரூ.500 சம்பளம்

இது குறித்து பெல்லாரியை சேர்ந்த தொழிலாளர்கள் கூறியதாவது:-

ஆண்டு முழுவதும் கரும்பு வெட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். காலையிலிருந்து மாலை வரை ஈடுபடுவோம். தினமும் ரூ.500 கூலி கிடைக் கிறது. ஆண்டு முழுவதும் நாடோடி போன்று கரும்பு வெட்டும் பணிக்காக குடும் பத்துடன் செல்வதால் குழந் தைகளை படிக்க வைக்க முடியவில்லை.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கோபி வனக்கோட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்க 2 லட்சம் மரக்கன்றுகள் தயார் வனத்துறை அதிகாரி தகவல்

கோபிசெட்டிபாளையம்,

கோபி வனக்கோட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்க 2 லட்சம் மரக்கன்றுகள் தயார் என வனத்துறை அதிகாரி தெரிவித்தார்.

மரக்கன்று வழங்கும் திட்டம்

தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வனத்துறை சார்பில் குறிப்பிட்ட கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், விவசாயிகளுக்கு ஒரு நிலையான மற்றும் லாபகரமான பொருளாதார நிலையை உருவாக்குதல் உள்ளிட்டவற்றை நோக்கமாக வைத்து ஜப்பான் இன்டர்நேஷனல் கோ–ஆப்ரெடிவ் ஏஜென்சியின் நிதி உதவியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஈரோடு வன மண்டல கோபிசெட்டிபாளையம் மூங்கில் தோட்ட கோட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது. இதற்காக பங்களாப்புதூர், கடம்பூர்–1, கடம்பூர்–2, தலமலை, தாளவாடி ஆகிய 5 வனச்சரகங்களில் 22 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. ஒரு கிராமத்திற்கு 10 ஆயிரம் மரக்கன்றுகள் வீதம் மொத்தம் 2 லட்சத்து 20 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகிறது.

5 கிராமங்கள்

கோபிசெட்டிபாளையம் அருகே கொங்கர்பாளையம், சத்தியமங்கலம் அருகே சிக்கரசம்பாளையம், காராச்சிகொரை, அரியப்பம்பாளையம் ஆகிய பகுதிகளில் மரக்கன்று பண்ணைகள் உள்ளன. இந்த பண்ணைகளில் மரக்கன்றுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பங்களாப்புதூர் வனச்சரகத்திற்கு உட்பட்ட கவுண்டம்பாளையம், வாணிப்புத்தூர், கொங்கர்பாளையம் உள்பட 5 கிராமங்களுக்கு வழங்கக்கூடிய மரக்கன்றுகள் கொங்கர்பாளையத்தில் உள்ள பண்ணையில் வைத்து வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த பண்ணையில் முதல்–அமைச்சரின் மாபெரும் மரம் நடும் திட்டத்திற்கான மரக்கன்றுகளும் வளர்க்கப்பட்டு வருகிறது.

மரக்கன்றுகள் தயார்

இதுகுறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

கிராமத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகள், 5 ஹெக்டேர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகள், மகளிர் மற்றும் ஆடவர் சுய உதவிக்குழுவினர் மற்றும் மரம் வளர்ப்பில் ஆர்வமுள்ள நிலம்

வைத்துள்ளவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படும். ஒரு ஏக்கருக்கு 200 மரக்கன்றுகள் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு வழங்க 2 லட்சத்து 20 ஆயிரம் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளது. பருவ மழை பெய்யத் தொடங்கியதும் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படும். வருகிற செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது. தேக்கு, மலைவேம்பு மரக்கன்றுகளை விவசாயிகள் அதிகமாக கேட்டு உள்ளனர். மலை வேம்பு மரம் 7 வருடங்களில் வளர்ந்து பலனை கொடுக்கும். தேக்கு மரம் 20 வருடங்கள் வளர்ந்து பலன்தரும்.
இவ்வாறு அவர் கூறினார்.

## ஒரு அடி உயர வாழைக்கன்று குழை தள்ளியது

ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள கீ.வரதராஜபுரம் பஞ்சாயத்து நலன்குடி கிராமத்தில் சேது என்பவரது தோட்டத்தில் வாழை பயிரிடப்பட்டு உள்ளது. இங்குள்ள ஒரு வாழை மரத்தின் அருகில் முளைத்த ஒரு அடி உயர வாழைக்கன்று குழை தள்ளியது. வாழை மரங்களுக்கு உரமிடுவதற்காக கன்றுகளை ஒதுக்கும் பணியில் ஈடுபட்டு இருந்தவர்கள் இதைப் பார்த்து அதிசயித்தனர். அப்பகுதி மக்கள் குழை தள்ளிய ஒரு அடி உயர வாழைக்கன்றை வியப்புடன் பார்த்து சென்றனர்.